


# FEDERATION OF ALL INDIA REALESTATE ASSOCIATION

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

FAIRA

**Dr. A.HENDRY**
Founder - National President   9962132526/fairadmn@gmail.com   www.faira.in   FAIRA-   Reg.no.484/2012


**FAIRA** கடித எண். 007/2024 **தேதி:** 05.02.2024.

பெறுநர்:

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,**
**தமிழ்நாடு அரசு,**
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600009.

<u>பொருள்:</u> **FAIRA** கூட்டமைப்பின் நிர்வாகிகள் தங்களை நேரில் சந்தித்து கட்டுமானத் துறை சார்ந்து வேண்டுகோள் வைக்க தங்களின் முன் அனுமதி கோரி கடிதம்.

**நாடும்-ஏடும்-நாளும் போற்றும் வகையில் தமிழகத்தை அனைத்து துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக மாற்றிட அல்லும் பகலும் அயராது பாடுபடும் பெருமதிப்பிற்குரிய தமிழகத்தின் தன்னிகரற்ற முதலமைச்சர் அவர்களுக்கு எமது பணிவான வணக்கம்.**

**FAIRA** கூட்டமைப்பு சென்னையை தலைமை இடமாக கொண்டு, கடந்த 12 வருடங்களாக **5000** உறுப்பினர்களுடன், தமிழ்நாட்டில் **38** மாவட்டங்களிலும், இந்தியாவில் **14** மாநிலங்களிலும் மிகச் சிறப்பான முறையில் கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் துறை சார்ந்தவர்களுக்கு வழிகாட்டியாகவும், அரசுக்கும் தொழில் சார்ந்தவர்களுக்கும் துறை சார்ந்த பரிந்துரைகளை, செய்து ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு கொண்டு வருகிறது.

மேலும் **FAIRA** கூட்டமைப்பு துவக்கிய நாள் முதல் இன்று வரை தமிழகத்தில் திமுக அரசின் ஆதரவு இயக்கமாக செயல்பட்டு வருகிறது.

திராவிட மாடல் அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, பதிவுத்துறை, வருவாய்த்துறை உட்பட பல துறைகளில் தங்களின் சீரிய தலைமையின் கீழ், வரலாற்று சிறப்பு மிக்க பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து நடைமுறைப் படுத்தியுள்ளது.



# FEDERATION OF ALL INDIA REALESTATE ASSOCIATION

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

FAIRA

**Dr. A.HENDRY**
Founder - National President

9962132526/fairadmn@gmail.com www.faira.in FAIRA- Reg.no.484/2012

இதற்காக மேற்கண்ட **FAIRA** கூட்டமைப்பின் நிர்வாகிகள் தங்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கவும், மேலும் மேற்கண்ட துறைகளில் இன்னும் மக்கள் நலனுக்கு எதிராக உள்ள சிக்கல்களை களைந்து, சீர்தூக்கி செம்மைப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

ஆகவே இதுகுறித்து மாண்புமிகு தமிழகத்தின் தன்னிகரற்ற முதல்வராகிய தங்களை நேரில் சந்தித்து கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் துறை சார்ந்தும், மக்கள் நலன் சார்ந்தும் கோரிக்கை வைப்பதற்கு தங்களின் முன் அனுமதியுடன் உரிய நேரம் ஒதுக்கி தந்து சந்திக்க வேண்டும் என தங்களை மெத்த பணிவோடு வேண்டுகிறோம்.

நன்றி!

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

ஆ.ஹென்றி,
நிறுவனர் - தேசியத் தலைவர்.
**FAIRA**.